1978 செப்டம்பர் 14]

[முற்பகல் 10.50]

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) 41, 42 184 ஆகிய விதிகளின் கீழ் உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, திரு. இராசரத்தினம் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைக்கு நிச்சயமாக இந்த அவை கவலைகொள்கிறது, அதுகுறித்து சபாநாயகர் அவர்கள் நிச்சயமாகக் கவனிப்பார்கள். .. ..

திரு. துரை முருகன் : பைனான்ஸ் மினிஸ்டருக்கு இருக்கிறது, முதல் அமைச்சருக்கு இல்லையே (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் என்னைப் பாராட்டியதோடு அமைந்திருப்பார்களேயானால் என் சார்பில் இருக்கிற கழக நண்பர்கள் வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் எங்கள் எல்லோரையும் விட அதிகக் கவலைப்படுபவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் என்பதை இந்த அவையில் நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தயவு செய்து உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. விஷயம் தெரிந்த திரு துரை முருகன் அவர்களைப் போன்றவர்கள் அவர்களுடைய கட்சியில் இருக்கிற சிலபேர்களைப் போல், அவர்களைப் பின் பற்றாமல் தனக்கு என்று ஒரு தனித்தன்மையோடு நீண்ட நாட்களாக (திரு. க. சுப்பு எழுந்தார்)— திரு. துரை முருகனுக்கு இந்தப் பாராட்டை நான் கொடுக்கக் கூடாதா ? (கூச்சல்— குழப்பம்.)

5, அரசினர் தீர்மானம்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, ‘‘தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3)-ன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்’’ என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.